1979 மார்ச் 7]

மாற்றி, தமிழிலே போட வேண்டுமென்ற எண்ணத்தையெல்லாம் அப்பொழுது முன்வைக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேள்வியின் முதல் பகுதியில், விலை நிர்ணயத்தைப் பற்றி கேட்டார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் ஒன்றாகக் கூடி அந்த விலையை நிர்ணயிக்க மைய அரசிடத்திலே ஆலோசனை பெற்று செய்யலாமா என்று கேட்டார்கள். அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர்.

*வினா எண் 273— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கும் பாபநாசம் அணைத் தண்ணீரை சேர்வலாறு சங்கம இடமான முண்டந்துரையிலிருந்து கால்வாய் மூலம் மணிமுத்தாறு அணையில் சேர்க்க வேண்டி அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, பாபநாசம் அணைத் தண்ணீரை சேர்வலாறு சங்கம இடமான முண்டந்துரையிலிருந்து கால்வாய் மூலம் மணிமுத்தாறு அணையில் சேர்த்தால், அநேக ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று தெரிகிறது. ஆகவே, அரசு அதை மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலனையில் உள்ளது.

களியாம்பூண்டியில் ஆரம்ப சுகாதார நிலையம்.

*வினா எண். 274— திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதியைச் சார்ந்த களியாம்பூண்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இல்லை.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் 75 ஊராட்சிகளை உள்ளடக்கிய பகுதியாகும். அங்கே மற்றும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் நிறுவ இந்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அரசின் கொள்கைப்படி ஒரு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்தான் அமுல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் 374 பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. தனிச் சிறப்பு வாய்ந்த பகுதிகளான 9 பஞ்சாயத்து ஒன்றியங்களில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. காளியாம்பூண்டி கிராமம் ஏற்கெனவே உத்திரமேரூர் ஆரம்ப சுகாதார நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் இக்கிராமத்திற்கு என தனிப்பட்ட முறையில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியம் இல்லை.

அய்யம்பேட்டை ஊராட்சியில் புதிய மருத்துவமனை.

* வினா எண் 275—திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா —

(அ) உத்திரமேரூர் தொகுதி அய்யம்பேட்டை ஊராட்சியில் மருத்துவ மனை கட்ட அரசு எவ்வளவு தொகை வழங்கி உள்ளது ?

(ஆ) கால்கோள் விழா செய்து, கட்டட நிர்மான வேலைகள் நடைபெறாமல் இருப்பதற்கான காரணங்கள் யாவை ?

(இ) கட்டடப் பணிகளை விரைவில் துவங்க அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) 1974 ஆம் ஆண்டு அரசு மருந்தகம் கட்ட தமிழ்நாடு பரிசுச் சீட்டு சிறப்பு நல நிதியில் இருந்து ரூபாய் 65,000 அனுமதியளிக்கப் பட்டது.

(ஆ) மிகவும் முக்கிய குறைந்த தேவைகளுடன் கட்டிடம் கட்டுவதற்கு, அனுமதிக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லாததால் கட்டிட வேலைகள் துவக்கப்படவில்லை.